# ஆகஸ்ட் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேத பாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.08.2017 | காலை 5.30மணி | வாக்குத்தத்த ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 04.08.2017 | மாலை 7.00 மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 06.08.2017 | காலை 8.30 மணி | கண்காணித்துவம் | யாத் 18:13-27<br>மத் 25:14-30 | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 11.08.2017 | மாலை 7.00 மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 13.08.2017 | காலை 8.30 மணி | பெண்கள் மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள் | எண் 27:1-11<br>லூக்கா 1:46-55 | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 18.08.2017 | மாலை 7.00 மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 20.08.2017 | காலை 8.30 மணி | திருவிருந்து சாக்கிராமந்து | ஆதி 14:17-24<br>மாற்கு 14:12-26 | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 24.08.2017 | மாலை 7.00 மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 27.08.2017 | காலை 8.30 மணி | வாலிபர் சிறப்பு ஞாயிறு மற்றும் ஒருநாள் ஒடுக்கக் கூட்டம் | | அருள்திரு. கிதியோன் தைரியம் மற்றும் சிறப்பு செய்தியாளர் |

ஆகஸ்ட் மாதம் - 2017

அன்புடையீர்,

# ஆயர்மடல்

**இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்.**

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை கடந்த மாதம் முழுமையும் பாதுகாப்பாய், சுகமாய் வழிநடத்தி இந்த ஆகஸ்ட் மாதத்தை காணும்படியாக அருள்புரிந்து இந்த புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கும்படியாக ஆசிர்வதித்திருக்கிறார். எனவே, கிறிஸ்துவின் வழியாய் பிதாவாகிய கடவுளுக்கு நன்றியினை ஏறெடுக்கிறேன். நம்முடன் பயணிக்கும் கடவுள் தமது வாக்கின் வழியாக, நம் நம்பிக்கையை பெலப்படுத்தி நம் விசுவாசத்தை உறுதிபடுத்தி வருகிறார். இந்த மாதமும் கடவுள் அருளும் வாக்கு, நம்மை பெலப்படுத்துகிறதாய் இருப்பதற்காக, கடவுளுக்கே நன்றியினை ஏறெடுக்கிறேன்.

**ஏசாயா : 58:11 :-**

ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார்; வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார்; உன் எலும்புகளை வலிமையாக்குவார் ; நீயும் நீர் பாய்ந்த தோட்டம் போலும் ; ஒரு போதும் வற்றாத நீரூற்று போலும் இருப்பாய்.

பழைய ஏற்பாட்டின் தீர்க்கன் ஏசாயா இந்த தீர்க்கதரிசனத்தின் வழியாக ஓர் உண்மையையும், புரிந்து கொள்ளுதலையும் முன் வைக்கிறார்.

கடவுளுக்குரிய ஆசிர்வாதத்திற்கும், கடவுளுக்குரிய நீதியுள்ள வாழ்விற்கும் தொடர்பு இருக்கிறது, என்பதே அது.

**(அ) வாக்குதத்தம் :- வறண்ட சூழலில் வளமை**

இன்றைய சூழலில் நமக்கு தேவையான, முக்கியமான ஆசீர்வாதம் இது. வறண்ட சூழலிலும் நிறைவை பெறும் ஆசீர்வாதம் வறண்ட சூழலிலும் வற்றாதிருக்கிற ஆசீர்வாதம், வறண்ட சூழலிலும் நீர்பாய்ந்த தோட்டத்தை போலிருக்கும் ஆசீர்வாதம் வறண்ட சூலுலிலும் சுகமாய், பெலமாய் இருக்கும் ஆசீர்வாதம்.

இந்த ஆசீர்வாதம், இயற்கைக்கு முரணானது போல் தோற்றமளிக்கிறது. ஏனெனில், வறட்சியில் வளமை இந்த உலகம் தர இயலாதது; முன் வைக்காதது.

ஆனால் கடவுளின் இந்த வாக்குதத்தம் அவருக்கு சாத்தியமானது, எப்படி? சாத்தியம்.

(1) கடவுளே படைப்பின் காரணர்

இதை நாம் முதலில் விசுவாசிக்க வேண்டும், கடவுளே படைப்பின் காரணராக இருப்பதால், வறட்சி மற்றும் வளமை இவை இரண்டும் கடவுளுடைய கரத்தில் வல்லமைக்குள்ளாகவே காணப்படுகிறது.

**சங்கீதம் : 148:5 :** அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது.

கொலோ :1:16:- ஏனெனில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதாவை, அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர்.

**(2) சூழலை மாற்றும் வல்லமை, படைத்தவர்க்கே உண்டு.**

ஏசாயா:41:17-20,21: சிறுமையும், எளிமையானவர்கள் தண்ணீரைத்தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும் போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் கடவுளாகிய நான் அவர்களைக் கைவிடாதிருக்கேன்......

**(ஆ) வாக்குத்தத்தம் கடவுளுடைய நீதிக்கு பின் செல்கிறது**

வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதம், அதன் நிறைவேற்றம் கடவுளுக்குரிய நீதியின் சிந்தனையிலும், அதற்குரிய செயல்பாடுகளிலும் உள்ளடங்கியிருக்கிறது.

**ஏரேமியா : 17:1:10**

**உபா : 28:1-14**

**ஏசாயா : 58 : 6-7-11 :-** கடவுளுக்குரிய விடுதலை செயல்களை செய்வது (கடவுளுக்குரிய நீதியுள்ள வாழ்வு) இப்படி வாழ்வதின் மூலம், நம் வாழ்வு மீண்டும் துளிர்க்கும் . கடவுளுக்குரிய நீதியுள்ள செயல்கள் நமக்கு முன்பாக செல்லும்போது, கர்த்தர் நமக்கு பின்பாக வந்து நம்மை காப்பார்; அதாவது நம்மை வழிநடத்தி பராமரித்து, போதித்து பாதுகாப்பார். கடவுளின் ஆசீர்வாதம் அந்தகார நிலையிலும், ஏணியாய் இருக்கும் ஒளி கடவுளுடைய பிரசன்னத்தின் அடையாளம். எனவே, அந்தகாரம் நீங்கி வாழ்வு பிறக்கும், கவலை நிங்கி, மகிழ்ச்சி பிறக்கும். வறட்சியிலும் வளமை நிலைப்படும்.

எனவே, நீதியான செய்கை, சிந்தை இவைகள் மட்டுமே, கடவுளின் வாக்குத்தத்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்றி நம்மை மெய்யான வாழ்வு பெற உதவி செய்கிறது.

**சங்கீதம் : 82:2-5, சங் : 89:14 நீதி : 21:3 |யோ : 2:29**

எனவே, கடவுள் நம்மை, தம் பிரசன்னத்தினால் வழிநடத்தி, அவர் வாக்குத்தத்தங்கள் உயிருள்ளவைகள் என்பதை விசுவாசிக்க செய்து நீதியுள்ள ஜனங்களால் ஸ்திரப்படுத்தி, அவர் தந்த வாக்குத்தத்தை நாம் அனுபவிக்க நம்மை ஆசீர்வதிப்பாராக.

இவண்,
உங்கள் அன்பு ஆயர்
அருள்திரு. **J.கிதியோன் தைரியம்**



# வாலிபர் சிறப்பு ஞாயிறு மற்றும் ஒருநாள் ஒடுக்கக் கூட்டம்

## நாள் : 27.08.2017 ஞாயிறு

## நேரம் : காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை

## அருள்திரு. கிதியோன் தைரியம் மற்றும் சிறப்பு செய்தியாளர்

- ★ துதி ஆராதனை
- ★ சிறப்பு பாடல்கள்
- ★ சிந்தனையைத் தூண்டும் செய்திகள்
- ★ கேள்வி நேரங்கள்
- ★ சிறப்பு விளையாட்டுக்கள்

**அனைவரும் வருக ! இறையாசி பெறுக !**

## WEDDING DAYS IN AUGUST

| | |
|---|---|
| August 17 | Mr.E.K.Raj Kumar & Mrs. R.Daisy |
| August 18 | Mr.Alwyn Raj & Mrs.Megha |
| August 20 | Mr.S.John Jayapal Raja & Mrs.J.Esther Jayamani |
| August 21 | Mr.N.Nova Manuel Raj & Mrs. Flora Manuel |
| August 23 | Mr.S.D Samson & Mrs.Mary Metilda |
| August 24 | Mr.D.Markas Joseph Paul & Mrs.M.Jesikanth Sujoini |
| August 27 | Mr.M.Augustin & Mrs. Subi Anitha |
| August 28 | Mr.Issac benjamin & Mrs.Cicilda |

**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



வாராந்திர வீட்டு **ஜெபக் கூடுகை** ஒவ்வொரு வாரமும் **செவ்வாய்கிழமை மாலை 7 - 7.30** மணிக்கு நடைபெறும் திருச்சபை அன்பர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்.



## மருத்துவக் குறிப்புகள்

### உலர்ந்த திராட்சி



- ஜீரண சக்தியை அதிகரிக்கும்
- அமிலத்தன்மையை (அசிடிட்டி) போக்கும்
- சருமத்தை பொலிவடையச் செய்யும்.

### கொண்டை கடலை



- உடல் எடை குறைக்க உதவும்
- இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை சீர்படுத்தும்
- கொழுப்பை குறைக்க உதவும்

## படித்ததில் பிடித்தது

இங்கிலாந்தில் இரண்டு புத்தகங்கள் உண்டு. ஒன்று பரிசுத்த வேதாகமம் மற்றும் சேக்ஸ்பியர் கவிதைகள், சேக்ஸ்பியரை உருவாக்கியது இங்கிலாந்து, ஆனால் இங்கிலாந்தை உருவாக்கியது பரிசுத்த வேதாகமமே.

## புதிய செய்தி

இனி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை **7-7.30 மணி** வரை சிறப்பு ஆராதனை நடைபெறும். திருச்சபை அன்பர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்.

## கீதங்களை புரிந்து பாடலாமா?

<u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

### காரிருளில் என் நேச தீபமே

**“பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு** முன்வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்”.

யாத்: 13:21

சில ஆண்டுகளுக்கு முன், அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் நடந்த மத ஆராய்ச்சி மாநாட்டில் (Parliament of Religions) எல்லா மதத்தினரும் பாடக்கூடிய ஒரு பாடலைத் தேர்ந்தெடுக்க முயன்று, கடைசியில் “காரிருளில் என் நேச தீபமே” என்னும் பாடலைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு நாளின் ஆரம்பத்திலும் அதைப் பாடி வந்தனர்.

இப்பாடலை எழுதியவர் ஜான் ஹென்ரி நியூமென் என்னும் ஆங்கிலத் திருச்சபையைச் சேர்ந்த பாதிரியார். அவர் 1801-ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம் 21-ஆம் தேதி லண்டன் மாநகரில் ஒரு தனவந்தரான பாங்கு முதலாளியில் புதல்வராகப் பிறந்தார். அவரது பெற்றோர் அவரைச் சட்டப் படிப்புக்கு அனுப்ப விரும்பினர். ஆனால் அவரோ ஆக்ஸ்வர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரித்துவக் கல்லூரியில் குருத்துவ ஊழியத்திற்காகப் பயின்று, 1824-ஆம் ஆண்டு தூய கிளெமெண்ட் ஆலயத்தின் குருவாக அபிஷேகம் பெற்றார். சில ஆண்டுகளுக்குப் பின் 1826-ஆம் ஆண்டு தூய கிளெமெண்ட் ஆலயத்தின் தலைமைக் குருவாக (Vicar) நியமனம் பெற்றார். ஆரம்பத்தில் அவர் ஆங்கிலச் சபையைச் சேர்ந்திருந்தாலும், காலக் கிரமத்தில் ரோமச் சபையில் விருப்பமுடையவராகக் காணப்பட்டார். 1841 -ல் ஆங்கிலத் திருச்சபையைக் குறித்த ஒரு வெளியீட்டை அவர் பிரசுரிக்கவே, அதைக் குறித்து கடுமையான அபிப்பிராய பேதம் உண்டானதால் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். பின்னர் 1845-ல் அவர் ரோமன் கத்தோலிக்கச் சபையைச் சேர்ந்து, 1879-ல் கார்டினல் என்னும் உயர் பதவியையும் பெற்றார்.

1833-ஆம் ஆண்டு நியூமென் இத்தாலி நாட்டுக்குச் சென்று, அங்கு நோய்வாய்ப்பட்டு, சுகமடைந்தபின், இங்கிலாந்துக்குத் திரும்ப உத்தேசித்து ஆரஞ்சுப் பழங்களை ஏற்றிச் சென்ற ஒரு பாய்மரக் கப்பலில் பிரயாணமானார். சரியான திசையில் காற்று வீசாததால் மத்தியதரைக் கடலில் கார்சிக்கா சார்டினியா தீவுகளுக்கிடையில் உள்ள போனிபேஸியோ ஜலசந்தியில் ஒரு வாரம் கப்பம் காத்திருக்க நேரிட்டது. இவ்வாரத்தை அவர்ஆங்கில கவிகள் எழுதுவதில் கழித்தார். இவ்விதமாக 1833-ஆம்



# BIRTHDAYS IN THE MONTH OF AUGUST

| | | | |
|---|---|---|---|
| August 1 | Mr.Jenkins Danish | August 20 | Mrs.Dixcy Jeba Clara |
| August 1 | Mas.A.S.Anto Jefferson | August 20 | Mr.G.Kaushikadharsh |
| August 2 | Mr.S.Benkins Dinesh | August 20 | Mr.K.Immanuel rudhubaran |
| August 3 | Master.R.Sam Gideon | August 21 | Miss.A.Helen Josephine |
| August 5 | Mr.Yuvaraj Kalyana Sundaram | August 21 | Mrs.Glory Abazhagan |
| August 5 | Mrs.M.Nirmala Kumari | August 21 | Master.Kevin Paul |
| August 5 | Mrs.K.Rupa Mary | August 21 | Miss.I.Sarah Natasha |
| August 6 | Mrs.Katherine Kalpana.P | August 21 | Mr.K.Helen prabha |
| August 7 | Miss.A.Radhika | August 22 | Mr.D.Baskar |
| August 7 | Master.A.Kevin | August 24 | Mr.Melki David |
| August 7 | Mrs.Punitha Muthiah | August 24 | Mrs.Nithya Priyadarshini |
| August 8 | Miss.R.Hepsiba Blessy | August 25 | Mr.A.Josewin |
| August 11 | Mrs.M.Jesikant Sujoini | August 25 | Miss.Anbitha John |
| August 12 | Mr.Paul Panneer Selvam | August 25 | Miss.A.J.Shekinah Jafflin |
| August12 | Miss.R.Hepsiba Princy | August 27 | Mr.J.John |
| August 15 | B.Gethsiyal Christina | August 27 | Mr.G.S.Titus Prabhakaran |
| August 16 | Miss Felcy Jaffrin | August 28 | Mr.Joseph Rajah |
| August 16 | Mrs.Wilce Jesantha | August 31 | Mr.T.Selvaraj |
| August 16 | Mrs.A.Selvamalar | August 31 | Mr.G.Anitlin Jinish |
| August 17 | Ms.S.Derick immanuel | | |

# வேத வினா - விடை போட்டி

## ஆகஸ்ட் மாத கேள்விகள்

அன்புடையீர் ! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இம்மாதம் வேதவினா விடைப் போட்டியாகக் கொடுப்பதன் மூலம் நம்முடைய வேத அறிவு விரிவடையும். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். இந்த வேதவினாவிடைப் போட்டி அப்போஸ்தலருடைய நடபடிகள் தெரிவு செய்யப்பட்டு இப்புத்தகத்திலிருந்து வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சரியான விடையைக் கட்டங்களில் நிரப்பவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 2 | | | | | 11 | 3 | | | 6 |
| | 1 1 | | | 5 | 4 | | | | |
| | | | 14 | | 5 | 17 | | | 12 |
| | | | | | | | 4 | 7 | |
| 3 | 10 | | | | ★ | | | | 8 |
| | | | 6 | | | 13 | | | |
| | | | 7 | | | | | | |
| | | | 15 | 16 | ★ | | | 8 | |
| | | 9 | | | | | | | |
| | | 11 | | | 10 | | | | |

குறிப்பு :

இடப்பக்கம் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் இடமிருந்து வலம் எனக் கொடுக்கப் பட்டிருக்கும் கேள்விகளுக்கு எண்கள் வலப்பக்கம் கீழ்ப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் மேலிருந்து கீழ் எனக் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கான எண்கள், பதில்கள் எத்தனை எழுத்துகளைக் கொண்டது என்பதைக் குறிக்க கேள்விக்கும் அந்த கேள்வி எண்ணிலிருந்து பதில் எழுதத் தொடங்க வேண்டும்.

I இடமிருந்து வலம்

1. சீஷர்கள் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்த நாள் (6)
2. இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால் இவனை விடுதலை பண்ணலாகும் என்றது யார்? (5



11. தீமோத்தேயு எனப்பட்ட சீஷன் இருந்த ஊர் எது?
12. யாருடைய வீடு ஜெப ஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது? (3)
13. கிரேத்தா தீவுக்கு முதலாளியாய் இருந்தவர் யார்? (4)
14. பவுலும், அவனோடிருந்தவர்களும் எந்தத் துறையில் இருந்தபோது எதிர்காற்றாயிருந்தது? (3)
15. கப்பற் சேதம் ஏற்பட்டபோது நீந்தத் தகாதவர்கள் எதன்மூலம் கரையேறும்படி நூற்றுக்கு அதிபதி கட்டளையிட்டான்? (3)
16. ‘மெர்க்குரி’ என்று அழைக்கப்பட்டது யார்? (3)
17. தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் இருந்த பட்டணம் ? (3)

தொகுப்பு ஆயரம்மா

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-08-2017**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129
www.csinewlifeinjesus.org

## கடந்த மாத வேத வினா விடை போட்டியில்

சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. தர்மராஜ்
2. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
3. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
4. திருமதி. கலா சுந்தரகுமார்
5. திருமதி. ஜாய்ஸி விமலா
6. திருமதி. கீதா ஹென்றி
7. திருமதி. ஸ்விட்டிலின் ரிச்சர்ட்

3. சவுலே சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாா் என எந்த பாஷையில் கூறப்பட்டது? (4)

4. லிபர்த்தினர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் யாருடனே தர்க்கம் பண்ணினார்கள்? (4))

5. மார்ஸ் மேடையின் நியாயாதிபதிகளுள் ஒருவர் யார்? (5)

6. கொரிந்து பட்டணத்தில் தன் வீட்டார் அனைவரோடுங்கூட கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனான ஜெபஆலயத்தலைவன் (4)

7. அக்காலத்திலே சபையிலே சிலரைத் துன்பப்படுத்திய ராஜா (3)

8. சவுல் எந்த பட்டணத்தைச் சேர்ந்தவன்? (3)

9. யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படிக் கட்டளையிட்டது யார்? (8)

10. பெந்தேகொஸ்தே நாளில் எந்தப் பட்டணத்தில் இருக்கப் பவுல் தீவிரப் பட்டான்? (5)

11. ஆதிரியாக் கடல் பயணத்தின் போது கப்பலில் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணிப் புசித்தவர்களின் எண்ணிக்கை (3 இலக்க எண்)

**II** மேலிருந்து கீழ்

1. இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானால் இவனை விடுதலை
பண்ணலாகும் என்று யாரிடம் கூறப்பட்டது?

2. தமஸ்குவில் இருந்த சகல யூதராலும் நல்லவனென்று சாட்சி பெற்றது யார்? (4)

3. அரிஸ்தர்க்கு எந்த தேசத்தைச் சேர்ந்தவன்? (6)

4. விக்கிரகங்களால் நிறைந்த பட்டணம் (4)

5. அப்போலோ எந்த பட்டணத்தில் இருந்த போது பவுல் எபேசுவுக்கு வந்தார்?

6. அகுஸ்து பட்டாளத்தைச் சேர்ந்த நூற்றுக்கு அதிபதி (3)

7. உயிர்த்தெழுதல் இல்லை என்று சொல்லுகிறவர்கள் யார்? (5)

8. மக்கேதோனியா தேசத்தான் ஒருவன் உதவி செய்ய வேண்டிக் கொண்டதாக
பவுல் தரிசனம் கண்ட இடம்? (3)

9. மினாசோன் எந்த தீவைச் சேர்ந்தவன் (6)

10. அரிஸ்தர்க்கு எந்த பட்டணத்தைச் சேர்ந்தவன்? (6)



ஆண்டு, ஜுன் மாதம், 16-ஆம் தேதி எழுதப்பட்ட மூன்று கவிகளே, உலகமெங்கும் பாடப்பட்டு வருகிற, "காரிருளில் என் நேச தீபமே" என்னும் பாடலாகத் திகழ்கின்றது.

ஆங்கில சபையைவிட்டு ரோமச் சபையைச் சேருமுன் அவருக்கிருந்த மனப்போராட்டத்தின்போது இதை எழுதியதாகப் பலர் கருதுகினறனர். ஆனால் இது தவறு : ஏனெனில் இப்பாடலை எழுதிய பன்னிரண்டு ஆண்டுகளுப்பின் பின்னரே அவர் சபை மாறினார். அவர் நேசித்து வந்த திருச்சபையைக் குறித்து அவருக்கிருந்த மனவருத்தமும், தன் சுய தேசத்தையும் தன் இனத்தவரையும் சேரவேண்டும் என்ற ஆவலும், அவர் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அவருக்கிருந்த வேதனையும், பெலவீனமுமே இப்பாடலை எழுதுவதற்குத் தன்னைத் தூண்டிய காரணங்கள் என அவரே கூறியுள்ளார். தான் ஓர் ஊழியம் செய்ய வேண்டியவர் என நம்பினார். ஆனால் அவ்வூழியத்தை எங்கே எவ்விதம் செய்வது என்று தெரியாமல், தெய்வ நடத்துதலுக்காக இந்த ஜெபப் பாடலை எழுதினார். இரவில் தீபஸ் தம்பமும், பகலில் மேகஸ்தம்பமும் இஸ்ரவேலரை வாக்குப்பண்ணப்பட்ட நாட்டுக்கு வழி நடத்தியதை அவர் எண்ணியிருக்கலாம்.

இப்பாடலின் கடைசி வரியில் "மறைந்துபோன நேசரை" (Angel Faces) என்பதைக் குறித்து பலவிதமான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆரம்பத்தில் பிரகாசித்த விசுவாசம், நம்பிக்கை முதலிய ஒளிக்கதிர்கள், பின்னால் மங்கி, தூரமாகச் சென்றதைக் குறிக்கும் என்பார் சிலர். இரட்சிப்பின் பிள்ளைகளுக்கு பயன்படுமாறு கடவுள் அனுப்பும் வழிகாட்டிகளைக் குறிக்கும் என்பார் சிலர். இன்னும் சிலர் பூலோக வாழ்க்கையில் நம்மோடிருந்து, நமக்கு முன்னால் சென்ற சிநேகிதரைக் குறிக்கும் என்பர். இப்பாடலை எழுதி சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப்பின், இதை எழுதிய கார்டினல் நியூமெனைக் கேட்டபோது, "எதை மனதில்கொண்டு எழுதினேன் என்று எனக்கு ஞாபகமில்லை". எனக் கூறினார். ஆகையால் இது மறைபொருளாகவே இருக்கிறது. ஆயினும் இப்பாடல் உலகப் பிரகாரமாகவும், ஆத்துமப் பிரகாரமாகவும், மனம் அலசடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளைகளில், கிறிஸ்தவர்களுக்கும், இதர மதத்தினர் பலருக்கும், ஆறுதலும், நம்பிக்கையும் அளிக்கும் ஒரு பாடல் என ஐயமின்றிக் கூறலாம்.

கார்டினல் நியூமென் 1890 - ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 11-ஆம் தேதி பர்மிங்ஹாம் நகரில், தமது 90-ஆம் வயதில் காலமானால்.